5. கவன ஈர்ப்பு.

(அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் காலரா நோய் பரவியுள்ளது குறித்து

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், சேந்தமங்கலத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காலரா நோய் பரவியுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தண்ட கவுண்டனூர், அக்கியம்பட்டி ஆகிய இரு கிராமங்களில் கடுமையான குடல் அழற்சி நோய் (Acute Gastro Enteritis) ஏற்பட்டுள்ளது என்ற தகவல் அறிந்தவுடன், நோய் பரவாமலிருக்க சுகாதாரப் பணியாளர்களால் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளபட்டன.

தண்ட கவுண்டனூர் கிராமத்தில், 20—1—1975-ம் நாள் ஒருவருக்குக் கடுமையான குடல் அழற்சி நோய் காணப்பட்டு, பேலுகுறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டார். அக்கியம்பட்டி கிராமத்தில், 12—3—1975 ஆம் நாள் ஒருவருக்குக் கடுமையான குடல் அழற்சி நோய் கண்டது. அந்நபர் சேந்தமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார்.

சுகாதாரப் பணியாளர்கள் அவ்விரு கிராம மக்களுக்கும் காலராத் தடுப்பு ஊசிகள் போட்டனர்; மற்றும் கிணறுகளில் மருந்துகள் கலக்கப்பட்டன. நோய் கண்ட நபர்களின் வீடுகளிலும் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டன. அதன் பிறகு அவ்விரு கிராமங்களிலும் யாருக்கும் இந்நோய் பரவவில்லை.

(முற்பகல் 11-00)

(ஆ) சென்னை பெரிய மருத்துவமனையில் இருதய நோயாளிகள் வார்டில் உள்ள கருவிகள் பழுதடைந்திருப்பதும் நோயாளிகள் பாதிப்பும்

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, சென்னை பெரிய மருத்துவமனையில் உள்ள இருதய நோயாளிகள் வார்டில் (கார்டியலாஜி டிபார்ட்மென்ட்) உள்ள இயந்திரங்கள் ஆறும் பழுதடைந்து இருப்பதால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.